# 1. குற்றம் மற்றும் அதன் கூறுகள் அல்லது குற்றச் செயல் மற்றும் குற்றமனம் [CRIME AND ITS ELEMENTS OR ACTUS REUS AND MENS REA]

பாடச்சுருக்கம்: **(SYNOPSIS)**

அ. முன்னுரை

ஆ. இயல்புத் தீங்குகள் மற்றும் விலக்குத் தீங்குகள்

இ. குற்றத்தின் பதவிளக்கம்

ஈ. தீங்கியல் மற்றும் குற்றங்களுக்கிடையிலான வேறுபாடு

உ. குற்றம் மற்றும் ஒழுக்கநெறிக்கிடையிலான உறவுமுறை

ஊ. குற்றவியல் சட்டத்தில் யூகங்கள் (**Presumptions**)

எ. குற்றங்களின் கூறுகள்

- **I.** குற்றச்செயல்
  - i. செயலின் கூறுகள்
  - ii. செயலின் சிறப்பியல்புகள்
- **II.** குற்றமனம்
  - i. குற்றமனத்தின் சிறப்பியல்புகள்
  - ii. ஆங்கில சட்டத்தில் குற்றமனம்
  - iii. குற்றமனத்தை இந்திய தண்டனை சட்டத்தில் செயல்படுத்துதல்
  - iv. குற்றமனத்திற்கான விதிவிலக்குகள்

ஏ. குற்றவியல் விஞ்ஞானத்தில் குற்றவியல் சட்டத்தின் இடம்



## அ. முன்னுரை: **(INTRODUCTION)**

முதல் இந்தியச் சட்டக்குழுவின் தலைவராக இருந்த மெக்காலே பிரபு இந்திய தண்டனைச் சட்டத்தை தயாரித்தார். இது "மெக்காலேயின் தண்டனைச் சட்டம்" என அப்போது அழைக்கப்பட்டது.

இங்கிலாந்து, பிரான்சு மற்றும் லூயிஸினியாவின் லிவிங்ஸ்டன் தண்டனைச் சட்டத்தின் அடிப்படையில் இவர் இந்த தண்டனைச் சட்டத்தை உருவாக்கினார். 1860ம் வருடம் மெக்காலேயின் தண்டனைச் சட்டம், இந்திய தண்டனைச் சட்டமாக பின்னால் மாறியது.

"சமூக ஒழுக்கத்திற்கு ஆபத்து விளைவிக்கும் உரிமைகள் மீறுதலானது" இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றங்களாக தேர்வு செய்யப்பட்டது. அத்தகைய குற்றங்கள் மீண்டும் செய்வதை தடுப்பதற்கு உரியமுறை தண்டனைகள் வரையறுக்கப்பட்டது.

## ஆ. இயல்புத் தீங்குகள் மற்றும் விலக்குத் தீங்குகள்: **(MALA IN SE AND MALA PROHIBITA)**

குற்றவியல் சட்டத்தில் குற்றங்கள் —"இயல்புத் தீங்குகள்" அல்லது "விலக்குத் தீங்குகள்" என வகைப்படுத்தப்படுகிறது.

### 1. இயல்புத் தீங்குகள்: **(MALA IN SE)**

இயல்புத் தீங்குகள் (Mala in se) என்பது "தவறு அல்லது அதனுள் தீங்கானது" எனப் பொருள்படும் லத்தீன் வார்த்தை ஆகும்.

சட்டத்தினால் "சட்ட முரணானது என வரையறுக்கப்பட்டதா" என்றில்லாமல் "இயல்பாக ஒழுக்க முரணாக இருக்கும்" ஒன்றைப் பற்றி விவரிப்பதற்காக பயன்படுத்தப்படும் வார்த்தை "இயல்புத் தீங்கு" ஆகும். அதாவது, "இயல்புத் தீங்கு" என்பது "இயல்பாக சட்டமுரணாக/ஒழுக்கமுரணாக இருக்கும்" ஒன்றை விவரிப்பதற்காக பயன்படுத்தப்படும் வார்த்தையாகும்.

இது குற்றத்தின் தன்மையிலிருந்து சட்டமுரணானது. அதாவது, அதன் 'பொருண்மை' எதுவும் கவனிக்கப்படாமல் அல்லது தண்டிக்கப்படாமல் இயல்பாகவே தீங்கானதாகும்.

இவை வழக்கமாக சாதாரண சட்டக்குற்றங்கள் அல்லது உயிர் அல்லது உடலுறுப்பிற்கு ஆபத்தான குற்றங்களாகும். அத்தகைய குற்றங்கள் நாகரீகமான சமுதாயத்தின் உணர்வுகளின்படி 'இயற்கையாகவே தீங்கானது' என தீர்வுறுதி செய்யப்பட்டதாகும்.

கொலை, வன்புணர்ச்சி, திருட்டு, மோசடி மற்றும் சாதாரண சட்டத்தில் உள்ள குற்றங்கள் ஆகியவை பொதுவாக இயல்புத் தீங்குகளாகும்.

2. விலக்குத் தீங்குகள்: **(Mala Prohibita)**

விலக்குத் தீங்குகள் (Mala prohibita) இயற்கையாக தீங்கானவையல்ல. ஒரு 'செய்சட்டத்தால்' தடை செய்யப்பட்டுள்ளதால், இவை குற்றங்கள் ஆகிறது.

உதாரணமாக, சட்டப்படி விளையாடப்படக் கூடிய விளையாட்டுகளை தடை செய்யும் வகையில் சட்டம் இயற்றப்பட்டால் அவை சட்ட முரணானதாகிறது.

அதாவது, செய் சட்டம் மூலமாக ஒரு செயலை தவறு என ஆக்குவதால், அது தவறான குற்றமாகிறது.



இது 'சட்டங்களினால் குறிப்பாக தடை செய்யப்பட்ட செயல்பாடு' என்பதை விவரிக்கும் பதமாகும். இத்தகைய செயல்கள் சட்டத்தினால் தடை செய்யப்படுவதால், இவை சட்டத்திற்குப் புறம்பானதாகிறது.

'பொது நலக் குற்றங்கள்' கட்டுப்பாட்டு விதிகளை மீறுவதால், விலக்கு தீங்குகளின் (Mala prohibitum) துணை வகைகள் ஆகும்.

இத்தகைய குற்றங்கள் 'நபர் அல்லது சொத்திற்கு நேரடியான அல்லது உடனடி தீங்கினை' விளைவிக்காது. ஆனால், இத்தகைய குற்றங்கள் எதிர்காலத்தில் 'நபர் அல்லது சொத்திற்கு' தீங்கினை விளைவிக்கலாம் என்ற எதிர்பார்ப்பால், அவற்றை நடக்க விடாமல் குறைப்பதற்கு இந்த தடுப்பு சட்டங்கள் வழி செய்கின்றன.

சாலை விதிகளை மீறுதல், பதிப்புரிமையை மீறுதல், உரிமம் இல்லாமல் மதுபானக் கடை நடத்துதல், உரிமம் இல்லாமல் முத்திரைத்தாள் விற்பனை போன்றவை 'விலக்குத் தீங்குகளுக்கு' உதாரணங்கள் ஆகும்.

இ. பதவிளக்கம்: **(DEFINITION)**

'சட்டத்தினால் தண்டிக்கப்படத்தக்க செயல் அல்லது விடுபாடு' என்பது குற்றம் என்பதற்கு சட்டப்பூர்வமான அர்த்தமாகும். சட்டத்தால் தடைசெய்யப்பட்ட செயலை செய்தல் மற்றும் சமுதாயத்தின் ஒழுக்க நெறியை மீறும் செயல் ஆகியவை குற்றமாகும்.

1. சர்வில்லியம் பிளாக் ஸ்டோன் கூற்றின்படி:
**(Sir William Blackstone)**

'அனைத்து சமூகத்தின் பொது உரிமைகளையும், கடமைகளையும் மீறும் செயல்' குற்றமாகும்.

2. ஸ்டீபன்: (**STEPHEN**)

'செயல்படுதல்' மூலம் அல்லது 'செயல்பட தவறுதல்' மூலம் ஒருவர் தவறாக செய்தாலோ அல்லது சரியாக செய்ய தவறினாலோ, அவர் மீது சட்டப்படியான தண்டனை விதிக்கலாம் எனக் கூறும் செயல் அல்லது விடுபாடு குற்றமாகும்.

3. ஆஸ்டின்: (**AUSTIN**)

பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் அவரது பிரதிநிதிகளின் விருப்பத்தில் தொடரப்படும் 'தவறு உரிமையியல் தீங்காகும்'. அரசாண்மை அல்லது அவரது கீழ்நிலை நிலையாளரால் தொடரப்படும் தவறு குற்றமாகும்.

4. கென்னி: (**KENNY**)

குற்றங்கள் என்பது தண்டனை அளிக்கப்படக் கூடிய தவறுகள். அவை தனிநபர் எவராலும் மன்னிக்கப்பட முடியாது. ஆனால் மன்னிக்கப்படக் கூடியது என்றால், அரசாண்மையினால் மட்டும் மன்னிக்க முடியும்.

குற்றவியல் சட்டத்தில் வரையறை தடை செய்தல், புலன் விசாரணை, சட்ட நடவடிக்கை மற்றும் குற்றங்களை தண்டித்தல் ஆகியவை உள்ளடங்கியுள்ளது. இது குற்றம், நிரூபணம், நடைமுறை மற்றும் தண்டனையை எடுத்துரைக்கிறது.

## ஈ. தீங்கியியல் மற்றும் குற்றங்களுக்கிடையிலான வேறுபாடுகள்: (DIFFERENCE BETWEEN TORTS AND CRIMES)

1. குற்றங்கள் மற்றும் தீங்கியல்கள் நேரடியாக சமுதாயத்தை பாதிக்கின்றன. அவை ஒன்றையொன்று தழுவி நிற்கின்றன. பல குற்றங்கள் தமக்குள் தீங்கியல்களை (உரிமையில் தீங்குகள்) உள்ளடக்கியுள்ளன.



இருப்பினும், சில தீங்கியல்கள் குற்றங்களாகாது. அதேபோல், சில குற்றங்கள் தீங்குகளை உள்ளடக்காது.

உதாரணமாக: தீங்கியல் சதி, கையாடல், தீய நோக்குடைய குற்ற வழக்கீடு, நரம்பு மண்டல அதிர்ச்சி, தனி தொல்லை, வணிகப் போலி, அவதூறு போன்ற செயல்கள் தீங்கியல்கள் ஆகும்.

ஆனால் தாக்க முனைதல், உடலைத் தாக்குதல் (வன்முறைத் தாக்கு), முறையின்றி சிறைப்படுத்தல் (சட்டவிரோதமாக அடைத்து வைத்தல்), ஏமாற்று (ஏமாற்றுதல்) அவதூறு, கவனமின்மை, அத்துமீறல் போன்ற செயல்கள் 'குற்றங்கள் மற்றும் தீங்கியல்களாகும்'. ஆனால் மோசடி, பொய்ச்சான்றளித்தல், இருமனம், கொலையாகாத மரணம், வன்புணர்ச்சி போன்ற செயல்கள் குற்றங்கள் மட்டுமே ஆகும். அவைகள் தீங்குகள் ஆகாது.

2. குற்றம் என்பது சமுதாயத்திற்கு எதிராக செய்யப்படும் 'குற்றவியல் தவறு' ஆகும். ஆனால், தீங்கு என்பது சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட நபருக்கான கடமையினின்று தவறுவதில் எழும் 'உரிமையில் தவறு' ஆகும்.

3. குற்றத்தைப் பொறுத்தவரை குற்றம் செய்தவரை தண்டிப்பதற்கு 'அவருக்கு குற்றமனம் இருந்தது' என்பதை நிரூபிக்க வேண்டும். ஆனால் தீங்கியல் இழப்பீடு கோரும் போது, பிரதிவாதிக்கு எதிராக 'குற்ற மனத்தை' நிரூபிக்கத் தேவையில்லை.

4. குற்றவியல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு 'சந்தேகத்தின் பலன்'(benefit of doubt) அளிக்கப்படுகிறது. இதில் அவர் குற்றவாளியாகவே இருந்தாலும் கூட அளிக்கப்படுகிறது.

ஆனால் தீங்கியலில் அத்தகைய 'சந்தேகத்தின் பலனை' பெறுவதற்கு பிரதிவாதிக்கு உரிமையில்லை.

5. தீங்கியியலில் அனைத்து வழக்குகளிலும் சமரசம் செய்து கொள்ள இரு தரப்பினர்களும் அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் குற்றத்தில் சில வழக்குகளில் மட்டுமே சமரசம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

6. குற்றம் என்பது பொதுவாக தண்டிக்கப்படக் கூடியது. ஆனால், சில சூழ்நிலைகளின் கீழ் அரசு மன்னிப்பு வழங்க முடியும். ஆனால் 'தீங்கு வழக்கில்' வாதி வழக்கை திரும்பப் பெறுவதின் மூலம் அல்லது இணக்கத்தீர்வு காண்பது மூலம் தான் பிரதிவாதியை விடுவிக்க முடியும்.

7. குற்றங்கள் 'குற்றவியல் நீதிமன்றங்களில்' விசாரிக்கப்படுகின்றன. தீங்குகள் 'உரிமையியல் நீதிமன்றங்களில்' விசாரிக்கப்படுகின்றன.

8. குற்றவியல் வழக்குகளில் நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வழக்கு தொடுப்பவரை சார்ந்ததாகும். ஆனால் தீங்குகள் வழக்கில் சாட்சியத்தைப் பொறுத்து இது மாறுபடும். அதாவது வாதியிடமிருந்து பிரதிவாதிக்கும் மற்றும் பிரதிவாதியிடமிருந்து வாதிக்கும் மாறுகிறது.

9. குற்றத்திற்கு பரிகாரம் தண்டனையாகும். ஆனால் தீங்கிற்கு பரிகாரம் இழப்பீடு ஆகும். (பணம் என்ற வகையில் இழப்பீடு)

10. அரசு சார்பாக காவல்துறை குற்ற வழக்குகளை தொடுக்கிறது. ஆனால் தீங்குகளில் தனிப்பட்ட நபர் பரிகாரம் கோரி வழக்குத் தொடுக்கிறார்.



பின்வருபவை தீங்குகள் மற்றும் குற்றங்களுக்கிடையிலான முக்கிய வேறுபாடுகள் ஆகும்.

| தீங்குகள்: (**Torts**) | குற்றங்கள்: (**Crimes**) |
|---|---|
| 1. உரிமையியல் தவறு | 1. குற்றவியல் குற்றம். |
| 2. தனிநபர் நடவடிக்கை எடுக்கிறார். | 2. அரசு அல்லது காவல் துறை நடவடிக்கை எடுக்கிறது. |
| 3. இழப்பீடு தான் நிவாரணம். | 3. அபராதம், சிறைதண்டனை மூலம் தண்டனை |
| 4. உரிமையியல் நீதிமன்றம் வழக்கை விசாரிக்கிறது | 4. குற்றவியல் நீதிமன்றம் வழக்கை விசாரிக்கிறது |
| 5. இதற்கு சட்டம் எதுவும் இல்லை. ஆனால் பொதுச் சட்டம் அல்லது சட்டத்தீர்ப்பு அல்லது வழக்குச் சட்டம் 'இழப்பீடினை' தீர்மானிப்பதை ஆளுமை செய்கிறது. | 5. இதற்கு இந்திய தண்டனைச் சட்டம் (IPC) மற்றும் இதர குற்றவியல் சட்டங்கள் உள்ளன. |
| 6. அவதூறு, தாக்க முனைதல் போன்றவை தவிர மற்றவற்றில் தீங்கிழைத்தவர் இறந்துவிட்டால், அவரது சட்டப்பிரதிநிதிகளின் மீது வழக்கு தொடரப்பட முடியும். | 6. குற்றவாளியின் மரணம் சட்ட நடவடிக்கைக்கு முடிவுகட்டுகிறது. |
| 7. தீங்கியலில் நடவடிக்கைக்கு காலவரை ஒரு தடையாகும். | 7. பொதுவாக ஒரு குற்றத்திற்கான சட்ட நடவடிக்கைக்கு காலவரைத் தடை எதுவும் இல்லை. குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 468ன் படி சில வழக்குகளில் மட்டும் காலவரை தடை உண்டு. |

உ. குற்றம் மற்றும் ஒழுக்கநெறிக்கும் உள்ள தொடர்பு:

**(RELATIONSHIP BETWEEN CRIME AND MORALITY)**

பண்டைய காலங்களில் குற்றம் மற்றும் ஒழுக்கநெறி ஆகியவை ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக கருதப்பட்டது. ஆனால், தற்போதைய நாட்களில் குற்றங்கள் எப்போதும் ஒழுக்க நெறியின் அடிப்படையில் இல்லை.

தற்போதைய செய்சட்டங்கள் (Statutes) ஒழுக்கத்திற்கு கலங்கம் விளைவிக்காத பல குற்றங்களை உருவாக்கியுள்ளது. உதாரணமாக போக்குவரத்துச் சட்டங்களை மீறுதல் ஒழுக்கத்திற்கு கலங்கம் விளைவிக்காத குற்றமாகும்.

ஒழுக்கம் சார்ந்த தவறுதல்களான பணத்திற்காக அதிக அளவு ஆசைப்படுதல், அன்பற்ற தன்மை போன்றவை சமூதாயத்தால் குற்றங்களாக கருதப்படாததால், இவைகள் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுவதில்லை. உடல் அல்லது மனரீதியான காயம் ஏற்படுத்தும் வெளிப்பாடு செயல்கள் செய்யப்படும் போது அவை குற்றம் இழைக்கப்படுவதாக கூறப்படுகிறது.

இவ்வாறு குற்றம் மற்றும் ஒழுக்கநெறி இரண்டும் எப்போதும் ஒருங்கிணைந்து செல்வதில்லை. சில முரண்பாடுகள் உள்ளன. சில குற்றங்களும், சில ஒழுக்கநெறி மீறல் செயல்களும் ஒன்றுக்கொன்று தனிப்பட்டு நிற்கின்றன.

ஊ. குற்றவியல் சட்டத்தில் யூகங்கள்:

**(PRESUMPTIONS IN CRIMINAL LAW)**

குற்றவியல் வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர் எப்போதும் குற்றமற்றவர் என்பது தான் சட்டத்தின் யூகம். எனவே, குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு இன்றியமையாத ஒவ்வொரு பொருண்மையையும் நிரூபிக்க வேண்டிய கடமை அரசு தரப்பிடமே உள்ளது.



குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றச் செயலை 'சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில்' அரசு தரப்பினர் சாட்சியம் இருக்க வேண்டியது அவசியம்.

உரிமையியல் வழக்கில் உள்ளது போல் குற்றத்திற்கெதிரான சாட்சியங்கள் ஊகங்களின் கலவையாக இருக்கக்கூடாது. ஆனால் இச்சாட்சியங்கள் நியாயமான சந்தேகங்கள் அனைத்தையும் தாண்டி இருக்க வேண்டும்.

'பல குற்றவாளிகள் தப்பிக்கலாம். ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது' என்பது விதி.

எ. குற்றக்கூறுகள் [குற்றச் செயல் (தடைசெய்யப்பட்ட செயல்) மற்றும் குற்றமனம்]:

**[ELEMENTS OF CRIME (ACTUS REUS AND MENS REA)]**

குற்றம் இழைக்கப்படுவதற்கு 2 கூறுகள் தேவைப்படுகின்றன

அ. குற்றச் செயல் (தடைசெய்யப்பட்ட செயல்) (அ) உடற்கூறு: (Physical element or Actus Reus)

ஆ. குற்றமனம் (அ) மனக்கூறு: (Mental element or Mens Rea)

குற்ற மனமின்றி குற்ற செயலில்லை என்ற கோட்பாட்டை அடிப்படையாக கொண்டு தான் தண்டனைக்கான பொறுப்பு நிர்ணயிக்கப்படுகிறது. குற்றமனமின்றி செய்யப்படும் செயல் குற்றமாகாது.

எனவே குற்றமனமும் அதைத் தொடர்ந்து செயலும் இருந்தால் தான் அது குற்றமாகும். எனவே ஒரு குற்றம் இழைப்பதற்கு குற்றமனம், குற்றச்செயல் இரண்டும் அவசியம் இருக்க வேண்டும்.

கீழ்கண்ட 5 பிரதான அம்சங்கள் குற்றவியல் பொறுப்பினைத் தீர்மானிக்க தேவைப்படும்.

குற்றச் செயல் / தடை செய்யப்பட்ட செயல்: **(ACTUS REUS)**

i. மனிதசெயல் — நேர்மறையான அல்லது எதிர்மறையான செயல் (மனிதனின் நடத்தை)

ii. குற்றத்தை செய்கின்ற நேரத்தில், சட்டத்தில் குறிப்பிட்ட படி உள்ள சூழ்நிலைகள்.

iii. மேற்படி சூழ்நிலைகளில் செய்நடத்தையின் விளைவுகள்.

குற்றமனம்: **(MENS REA)**

i. மனிதனின் நடத்தையானது தன்னிச்சையானதாக இருக்க வேண்டும்.

ii. நடத்தையின் விளைவு ஏற்கனவே எதிர்பார்த்தபடி இருக்க வேண்டும்.

## I. குற்றச் செயல்/தடை செய்யப்பட்ட செயல் (ACTUS REUS)

குற்றம் என்பது ஒரு செயல். நடத்தையின் உடல் ரீதியான விளைவு. 'சட்டம் தடுக்க விரும்பும் மனித நடத்தையின் முடிவு□ என இது வரையறுக்கப்படுகிறது.

(உ—ம்) கொலையைப் பொறுத்தவரை பலியானவர் இறந்ததைக் கொண்டு கொலையாளியின் நடத்தையை நிர்ணயிக்க முடிகிறது. இங்கு இவரது நடத்தை குற்றசெயலாகும்.

குற்றவாளியின் நடத்தை 3 வகைகளில் வெளிப்படுகிறது.



i. வேண்டுமென்றே செய்தல் (அ) செய்யத்தக்க செய்யாமை

ii. முந்திய செயல்கள் உட்பட சில புறச்சூழ்நிலைகள்

iii. சில பின் விளைவுகள்.

செயல் என்பது மன எண்ணம் செயல்படுவதின் விளைவாக ஏற்படுவதாகும். இது எண்ணத்தின் செயல்பாட்டிலிருந்து ஏற்படுகிறது. எண்ணம் என்பது மனதினால் நினைக்கப்பட்டு மற்றும் செய்யக் கூடியதாக இருக்கலாம்.

ஒரு பிரச்சனையை எழுத்து வடிவத்தில் வெளிப்படுத்துவதன் மூலமும் இது வெளிப்படுத்தப்படலாம். முந்தையது உட்கிடை செயல் என்றும் பிந்தையது வெளிப்படைச் செயல் என்றும் அழைக்கப்படுகிறது.

**I.** செயலின் கூறுகள்: **(ELEMENTS OF ACT)**

அ. தோற்றம்

ஆ. சூழ்நிலைகள்

இ. பின் விளைவுகள்

அ. தோற்றம்: ***(Origin)***

நபர் ஒருவர் ஒரு செயலை செய்தால் அவர் அது பற்றி முதலில் எண்ண வேண்டும். அதன் பிறகு உடல் ரீதியாக செயல்பட வேண்டும்.

(உ—ம்) 'அ' என்பவர் 'ஆ' வைச் சுட விரும்புகிறார் 'அ' முதலில் இது குறித்து நினைக்க வேண்டும். பிறகு தனது கையை உயர்த்தி துப்பாக்கியில் தனது விரல்களைப் பதித்து சுடுவதற்காக விசையை இழுக்க வேண்டும்.

ஆ. சூழ்நிலைகள்: ***(Circumstances)***

சூழ்நிலைகள் என்பது மெய்மை நிகழ்ச்சி ஆகும். மேற்கண்ட உதாரணத்தை பொறுத்த அளவில், கீழ்கண்ட நிகழ்ச்சிகள் இருக்க வேண்டும்.

1. துப்பாக்கியில் ஏற்கனவே தோட்டாக்கள் நிரப்பப்பட்டிருக்க வேண்டும்.

2. துப்பாக்கி குறிக்கு நேரே 'ஆ' இருக்க வேண்டும்.

இ. விளைவுகள்: ***(Consequences)***

தோற்றம் அல்லது சூழ்நிலைகளின் முடிவே விளைவுகளாகும்.

மேற்குறிப்பிட்ட உதாரணத்தில் துப்பாக்கியின் விசை இழுக்கப்படுதல், தோட்டா வெடிப்பது, தோட்டா உடலில் பாய்வது மற்றும் ஆ இறப்பது ஆகியவை செயலின் பின்விளைவுகளை உருவாக்குகிறது.

'செயலின் தோற்றம்' செயலை சட்ட விரோதமாக ஆக்குவதில்லை. ஆனால் சூழ்நிலைகள் மட்டுமே செயலை சட்ட விரோதமானதாக அல்லது ஒரு குற்றமாக ஆக்குகிறது.

**II.** செயலின் சிறப்பியல்புகள்:**(CHARACTERISTICS OF ACT)**

அ. மன உறுதிக்கு உட்பட்டு நடைபெறும் நிகழ்ச்சியே செயலாகும். (உ—ம்) 'அ' கோபுரம் அல்லது கட்டிடத்திலிருந்து தவறி கீழே விழுவது நிகழ்வாகும். அதுவே அ கோபுரம் அல்லது கட்டிடத்திலிருந்து குதிப்பது செயலாகும்.



ஆ. ஒரு செயல் 'செய்தக்க செய்யாமையையும்'(ommission) உள்ளடக்கலாம்.

(உ—ம்) ஒரு பெற்றோர் தனது குழந்தையை பட்டினியாக போட்டு கொலை செய்வதற்கு பொறுப்பாக்கப்படுகின்றனர்.

இ. ஒரு மனிதன் ஒரு செயலின் விளைவுகளை முன்கூட்டியே அறிந்திருந்தால் மட்டுமே தன்னுடைய செயலுக்காக பொறுப்பாக்கப்படுகிறான்.

ஈ. தொடர்ந்து மற்றும் குறுக்கிடும் காரணங்கள் இருந்தால் அச்செயல் தண்டிக்கப்படக் கூடியதல்ல.

(உ—ம்) ஒரு மனிதன் ஒரு பெண்ணை சுடுகிறான். அந்தப் பெண் காய்ச்சலினால் இறக்கிறாள். இச்சந்தர்ப்பத்தில் குற்றவாளி மீது கொலைக்குற்றம் சாட்ட முடியாது. ஏனெனில் இறந்தது காய்ச்சலினால் தான். சுட்டதினால் அல்ல.

உ. சில சூழ்நிலைகளின் கீழ் ஒருவன் பங்கு எடுக்கவில்லை என்றாலும் கூட அவனது செயல் தண்டிக்கக் கூடியதாகும்.

(உ—ம்) டெல்லியிலுள்ள ஒரு மனிதன் சென்னையில் குற்றம் புரிவதற்கு ஏற்பாடுகள் செய்திருந்தால், அவன் தண்டனைக்குரியவன் ஆவான்.

இவ்வாறு அகற்றுதல் மற்றும் சதி போன்ற செயல்கள் குற்றத்தில் உடல்ரீதியாக நேரடிபங்கேற்பு இல்லையென்றாலும் தண்டிக்கத்தக்கது ஆகும்.

ஊ. காரண காரியம்:***(Causation)***

காரண காரியம் என்பது நடத்தை மற்றும் முடிவிற்கிடையிலான தற்செயலான தொடர்பு முறையாகும். குற்றச்செயலுடன் (செயல்) நடத்தையை தொடர்புபடுத்துவதற்கு இது வழி வகுக்கிறது. அதாவது தீங்கு விளைவிப்பது.

முடிவு பெறப்படும் இடத்தில் தான் காரணகாரியம் செயல்படும். முடிவு பெறப்படாத இடத்தில் ஒரு குற்றத்தில் காரண காரியத்திற்கு சம்பந்தம் கிடையாது.

ஒரு நிகழ்வின் காரண காரியம் மட்டுமே சட்டப் பொறுப்பை உருவாக்குவதற்கு போதுமானதாகாது.

நிகழ்மை சார்ந்த காரண காரியத்தை ஏற்படுத்துவதற்கான வழக்கமான வழிமுறை 'இல்லாவிடில்' பரிட்சை (but for-test) ஆகும். அதாவது குற்றம் சாட்டப்பட்டவரின் செயல் இல்லாமல் இருந்தால் தீங்கு ஏற்பட்டிருக்காது என்பதாகும்.

உதாரணமாக அ என்பவர் ஆ என்பவரை சுட்டு காயப்படுத்தி விடுகிறார். அ என்பவரின் செயலில்லாமல் ஆ காயப்பட்டிருப்பாரா என்பது கேள்வி? இல்லையென்பது விடையானால் அ என்பவர் ஆ என்பவருக்கு காயம் ஏற்படுத்தி உள்ளார் என்பது பொருள்படும்.

குற்ற செயலை தீர்மானிக்க 'இல்லாவிடில்' பரிட்சை என்பது மிக அவசியம். அதாவது பாதிப்படைந்தவரின் காயம் 'தீங்கு விளைவிக்கும் குற்றம் சாட்டப்பட்டவரின் செயலினால்' நடந்தது என்பதற்கு 'இல்லாவிடில்' பரிட்சை அவசியம்.

புதிய செயல் இடை புகுதலினால் மட்டுமே (புதிய இடைபுகும் செயல்) காரண காரிய தொடரை நிறுத்த முடியும். இவ்வாறு ஒரு முக்கிய செயலில் ஒரு நபர் தலையிட்டால் மற்றொருவர் பொறுப்பிலிருந்து விடுபடுகிறார். ஆனால் அந்த மற்ற ஒருவரின் தலையீடு போதுமானதாக இருக்க வேண்டும்.



அமெரிக்காவில் காரண காரியம் என்பது 'அண்மை காரணக் கோட்பாடு' (doctrine of proximate cause) என கூறப்படுகிறது. மேலும் அது 'முன்னுணரும் தன்மையின்' விளைவு எனக் கருதப்படுகிறது.

இதன்படி, குற்றம் சாட்டப்பட்டவர் அவருடைய செயலின் முன்னுணர்தலுக்குப் பொறுப்பாகிறார். ஆனால், எதிர்பாராத பின்விளைவுகளுக்கு அவர் பொறுப்பாவதில்லை.

உதாரணமாக கடல் நீரில் அ என்பவர் ஆ என்பவரை சுடுகிறார். இதன் காரணமாக ஆ அசைவற்றுப் போகிறார். அவர் கடல் நீரில் மூழ்கினால் அதற்கு துப்பாக்கிச் சூட்டுக் காயம் அல்லது ரத்த இழப்பின் காரணம் என்பதை விட எழும் அலையில் மூழ்கி இருக்கலாம் என வாதம் செய்யலாம்.

இங்கு சுடுகின்ற தன்னுடைய செயல் ஆ என்பவரை அசைவற்று ஆக்கிவிடும் என்றும் அதனால் அவர் ஒரு எழும் அலையில் மூழ்கிவிடலாம் என்பதையும் அ என்பவர் முன்னுணர முடியும்.

## II. குற்றமனம்
## (MENS REA)

குற்றத்தின் இரண்டாவது அத்தியாவசிய கூறு குற்றமனம் ஆகும். அதாவது தீயமனம், தீய எண்ணம் அல்லது தவறான செயல் குறித்து அறிந்திருத்தல், சட்டப்படியான செயலை வேண்டுமென்றே செய்யாதிருத்தல், செயலை செய்வதில் அக்கறையின்றி இருத்தல் ஆகும்.

குற்றத்தை இழைப்பதற்கு முன்பு கட்டாயம் குற்றமனம் இருக்க வேண்டும். குற்றச் செயலை (சட்டத்தினால் தடை செய்யப்பட்ட செயலை) செய்வதற்கான எண்ணம் இருக்க வேண்டும் என கிளாண்ட்வில்லி வில்லியம்ஸ் என்பவர் கூறுகிறார்.

‘குற்றமனம் என்பது ஒரு குறிப்பிட்ட குற்றத்தை செய்வதற்கு உரிய எண்ணத்தை உடையதாகும்’. இந்த எண்ணம் ஒரு குற்றத்தை செய்வதற்காக இருக்கலாம் அல்லது சட்டமுறையான செயலை செய்வதில் கவனக் குறைவாக இருத்தல் ஆகும்.

காண்டு வழக்கு: ***(Khandu’s case)***

குற்றம் சாட்டப்பட்டவரின் நண்பர்கள் ஒரு வீட்டிற்குள் நுழைந்து கொள்ளையடித்தனர். குற்றம் சாட்டப்பட்டவர் வெளியில் நின்று கொண்டு அதை கவனித்துக் கொண்டிருந்தார். வீடு புகுந்து திருடுதல் வழக்கில் (இந்திய தண்டனைச் சட்டப்படி கொள்ளை) குற்றம் சாட்டப்பட்டவர் தண்டிக்கப்பட்டார். இதில் அவர் பங்கு பெறவில்லையென்றாலும் கூட, இக்குற்றத்தைப் புரிவதற்கு அவருக்கு குற்றமனம் இருந்தது.

கிளான்ட்வில்லி வில்லியம்ஸ் என்பவர் குற்றமனம் என்பது குறிப்பிட்ட குற்றத்திற்கு அவசியமான மனக்கூறு என குற்றமனத்தை வரையறுக்கிறார். இந்த எண்ணம் ஒரு செயலை செய்வதற்காக அல்லது சட்டப்படியான செயல் ஒன்றை செய்வதிலிருந்து அலட்சியத் தன்மை என்று கூறலாம்.



## I. குற்றமனத்தின் சிறப்பியல்புகள் : (CHARACTERISTICS OF MENS REA)

அ. குற்றமனம் என்பதில் இரண்டு நோக்கங்கள் அடங்கும். ஒன்று நேர்மறை செயலை செய்தல். மற்றொன்று அச்செயலை செய்வதில் கவனமின்றி இருத்தல்.

ஆ. எண்ணம் என்பது தெரிந்திருந்ததிலிருந்து **(knowledge)** வேறுபடுவதாகும் : எண்ணம் என்பது ஒரு செயலை செய்வதற்கு உள்ள விருப்பம் ஆகும். தெரிந்திருத்தல் என்பது ஒரு செயலைச் செய்கின்ற நபர் தனிப்பட்ட முறையில் தகவலை அறிந்திருத்தல் ஆகும். எண்ணம் எப்போதுமே தண்டிக்கப்படக் கூடியதாகும். ஆனால் அறிந்திருத்தல் எப்போதும் தண்டிக்கப்படக் கூடியதல்ல.

(உ—ம்) நோயாளி இறந்து விடுவார் என்று தெரிந்திருந்தும் கடினமான அறுவை சிகிச்சை ஒன்றை ஒரு டாக்டர் செய்கிறார். நோயாளி இறந்துவிடுகிறார். டாக்டர் இதற்கு பொறுப்பாக முடியாது. ஏனெனில் டாக்டரின் எண்ணமானது நோயாளியை பிழைக்க வைப்பது தான்.

இ. எண்ணம் என்பது உள்நோக்கத்திலிருந்து (Motive) மாறுபட்டது. எண்ணம் என்பது உடனடி முடிவாகும். உள்நோக்கம் என்பது செயலின் கடைசி விளைவாகும்.

(உ—ம்) ‘அ’ தன்னுடைய பசியை தீர்ப்பதற்காக சில பிஸ்கட்டுகளை திருடுகிறான். இதில் உள்நோக்கமானது நல்ல நோக்கமாகும். அதாவது பசியை தீர்ப்பதாகும். ஆனால் திருடுதலான உடனடி செயலானது கெட்ட எண்ணமுடையது. எனவே தண்டிக்கப்படக் கூடியதாகும்.

இவ்வாறாக ஒரு மனிதன் நல்ல மற்றும் சட்டப்பூர்வமான உள்நோக்கத்துடன் சட்டவிரோதமான வழிகளை பின்பற்றினால் அவன் தண்டிக்கப்படக் கூடியவனாவான். உள்நோக்கம் என்பது காதல், பயம், வெறுப்பு போன்றவைகளை கொண்டது. ஆனால் எண்ணத்திற்கு இவ்விதமான உணர்ச்சிகள் கிடையாது.

## II. ஆங்கிலச் சட்டத்தில் குற்றமனம் ':
## (MENS REA IN ENGLISH LAW)

இங்கிலாந்திலுள்ள பொதுச்சட்டத்தின் கீழ் ஒருவனது குற்றச்செயலுக்கு குற்றமனம் இருந்தால் மட்டுமே அவன் பொறுபாக்கப்பட்டு நீதிமன்றத்தால் தண்டிக்கப்படுகிறான். குற்றமனமின்றி குற்றசெயலில்லை என்பது தத்துவமாகும். குற்றமனதுடன் செய்திருந்தாலன்றி வெறும் செயல் மட்டும் குற்றமாகாது எனப்படும்.

ஆங்கில சட்டத்தில் குற்ற மனதை குறிக்க எண்ணம், அறிந்திருத்தல், கவனக்குறைவு, நேர்மையின்மை, மோசடி செய்தல் போன்ற வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு குற்றவியல் பொறுப்படைவை தீர்மானிப்பதற்கு தேவைப்படும் குற்றமனம் குற்றவியலின் மெய்நிலையான தரநிலையை பொருளுரையான தரநிலைக்கு மாற்றிவிட்டது.

## III. இந்திய தண்டனைச் சட்டத்தில் குற்றமனத்தை செயல்படுத்துதல்:
## (APPLICATION OF MENS REA IN I.P.C)

இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றங்களாக அறிவிக்கப்பட்ட அனைத்திற்கும் குற்றமனக் கோட்பாடு



பொருந்தும். இருந்த போதிலும், இதற்கு பொதுநல குற்றங்களில் மட்டும் சில விதிவிலக்குகள் உண்டு.

## IV. குற்றமன கோட்பாட்டிற்கான விதிவிலக்குகள்:
## (EXCEPTIONS TO THE DOECTINE OF MENS REA)

அ. பகரப் பொறுப்படைவு (பணியாளரின் செயலுக்கு முதலாளியின் பொறுப்படைவு):
**(VICARIOUS LIABILITY)(MASTER'S LIABILITY FOR SERVANT'S ACT)**

வழக்கமாக, ஒரு மனிதன் தன்னுடைய சொந்த செயல்களுக்கு பொறுப்பாகிறான். ஆனால், பகரப் பொறுப்பின் கீழ் வேறு ஒருவர் செயலுக்காக மற்றொருவன் பொறுப்பாக்கப்படுகிறான்.

இவ்வாறாக, ஒருவன் தான் செய்யாத குற்றத்திற்காக, அதாவது மற்றொருவர் செய்த குற்றத்திற்காக பொறுப்பாக்கப்படுகின்றான். இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் உள்ள பெரும்பாலான குற்றங்களுக்கு பகரப்பொறுப்பு பொருந்தாது.

இருந்தபோதிலும், கீழ்கண்ட குற்றங்கள் பொறுத்தவரை பகரப்பொறுப்பு பொருந்தும்.

1. பிரிவு **154: (Sec. 154)** நிலத்தின் உரிமையாளர் அவரது நிலத்தில் கலகம் ஏற்பட்டு, அது குறித்து காவல் துறைக்கு அவர் தெரிவிக்காமல் இருந்தால், கலகம் என்ற குற்றத்திற்கு பொறுப்பாவார்.

2. பிரிவு **155: (Sec. 155)** நிலத்தின் உரிமையாளருக்கு நன்மை அளிக்கும் வகையில் கலகம் நடைபெற்றிருந்தால் இப்பிரிவு பொருந்தும்.

3. பிரிவு. **156: (Sec. 156)** எஜமானர்கள் இல்லாத பட்சத்தில் முகவர்கள் அல்லது மேலாளர்கள் கலகத்திற்கு பொறுப்பாவார்கள்.

4. சட்டமுறைப் பொறுப்பு: ***(Statutory liability)***

பணியாளர் ஒருவரின் செயல்களுக்கு அல்லது செய்தக்க செய்யாமைக்கு முதலாளி மீது செய்சட்டங்கள் குற்றவியல் பொறுப்பை சுமத்தலாம். பொதுவாக, அனைத்து உரிம வழக்குகளிலும் முதலாளி பொறுப்பாக்கப்படுகிறார்.

5. பொதுத் தொல்லை: ***(Public Nuisance)***

முதலாளிக்கான பணிகளைச் செய்யும் போது, அவர் கீழ் வேலைபார்க்கும் பணியாளர்கள் பொதுத் தொல்லை ஏற்படுத்தினால், அந்த பொதுத் தொல்லை குற்றத்திற்கு முதலாளி பொறுப்பாக்கப்படுகிறார்.

6. கடமையிலிருந்து தவறுதல்: ***(Neglect of duty)***

ஆபத்தான செயல்பாடுகளை கொண்ட பணியினை திறமையற்ற தொழிலாளர்களுக்கு முதலாளி அளிக்கிறார். அத்தகைய தொழிலாளியின் கவனமின்மையினால் மூன்றாம் நபர்களுக்கு ஏற்படும் எந்த தீங்கிற்கும், முதலாளி குற்றவியல் ரீதியில் பொறுப்பாகிறார்.

ஆ. கடும் பொறுப்படைவு:
**(STRICT LIABILITY OR ABSOLUTE LIABILITY)**

கடும் பொறுப்படைவுக் குற்றங்கள் என்பது குற்றமனத்தின் தேவை முழுவதுமாக விலக்கப்படும் குற்றங்கள் ஆகும். ஒரு நபருக்கு செயலை செய்வதற்கு எண்ணம் இல்லை மற்றும் அவரது தரப்பில் கவனமின்மை எதுவும் இல்லையென்றாலும் கூட, அவரது செயலுக்கு அந்த நபர் பொறுப்பாக்கப்பாகிறார்.



பின்வருபவை இதற்கான நிகழ்வுகளாகும்

— அரசுக்கு எதிரான குற்றங்கள் (இந்திய அரசுக்கு எதிராக யுத்தம் செய்தல்) (பிரிவு 121)
— இராஜ துரோகம் (பிரிவு 124 — (அ))
— உயர்அதிகாரிகளை தாக்குதல் (பிரிவு 125)
— இந்திய போலிநாணயங்களை தயாரித்தல் (பிரிவு 232)
— ஆட்கவர்தல் (பிரிவு 362)
— ஆட்கடத்தல் (பிரிவு 359)

பொதுநலக் குற்றங்கள் மற்றும் குற்றமனம்:
**(Public welfare offences and Mens rea)**

கடும் பொறுப்படைவுக் கோட்பாட்டின் கீழ் பொதுநலக் குற்றங்களுக்கு குற்றமனம் பொருந்தாது. அதாவது, உணவுக் கலப்படச் சட்டம், அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், அந்நிய செலவாணிச் சட்டம், சுங்கச் சட்டம் போன்றவற்றின் கீழ் உள்ள குற்றங்களுக்கு குற்ற மனம் தேவையில்லை.

மேலும், உணவு, மருந்துகள், எடைகள் மற்றும் அளவுகள், பதுக்கல் மற்றும் கள்ளச் சந்தை, உரிமம், வருவாய், சுற்றுச்சூழல் மாசு போன்ற பொதுநல குற்றங்களில் குற்ற மனம் தேவையில்லை.

இ. குற்றமனம் இல்லாத நிலைமை (அ) நிகழ்ச்சி:
***(CASES OF ABSENCE OF MENS REA)***

சில சிறப்பு நிலைகளின் கீழ் குற்றம் இழைத்தவர் குற்ற பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறார். குழந்தைகள், பித்தர்கள், மனநிலை சரியில்லாத நிலையிலுள்ளவர்கள் போன்றவர்களுக்கு குற்ற பொறுப்பு கிடையாது.

கீழே உள்ளவற்றில் குற்றமனம் இல்லை:

— விபத்து (பிரிவு 80)
— தேவை (பிரிவு 81)
— இளம்சிறார் (பிரிவு 82 & 83)
— மனநிலை சரியில்லாத நிலையிலுள்ளவர்கள் (பிரிவு. 84)
— மதிமயங்கி இருத்தல் (பிரிவு 85)

குற்றங்களின் சட்ட நடவடிக்கைக்கான கால வரம்பு: **(Limitation for prosecution of offences)**

முன்னர் ஒரு நபர் மீது ஒரு குற்றத்திற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு காலவரம்பு எதுவும் கிடையாது. எனவே குற்றமிழைத்த பிறகு, நீண்ட காலங்கள் கழித்தும் குற்றவியல் நடவடிக்கைகள் தொடரப்பட்டது.

ஆனால், தற்போது சில குற்றங்களுக்கு புலன் கொள்வதற்கு காலவரம்பை குற்றவியல் நடைமுறை சட்டம் வழங்குகிறது. இவ்வாறு தற்போதைய காலத்தில், குறிப்பிட்ட கால அளவிற்குப் பிறகு, இந்த குற்றங்கள் தண்டிக்கப்பட முடியாதவையாகின்றன.

பின்வருபவை குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973 பிரிவு. 468ன் படியிலான காலவரம்பாகும்:

அ. அபராதம் மட்டுமே விதிக்கப்படக் கூடிய குற்றங்களுக்கு ஆறு மாதங்கள்

ஆ. ஒரு வருடத்தை மீறாத சிறைதண்டனை விதிக்கத்தக்க குற்றங்களுக்கு ஒரு வருடம்.

இ. ஒரு வருடத்தை மீறும் மற்றும் மூன்று வருடங்களை மீறாத சிறை தண்டனை விதிக்கத்தக்க குற்றங்களுக்கு மூன்று வருடம்.



ஏ. குற்றவியல் விஞ்ஞானத்தில் குற்றவியல் சட்டத்தின் இடம்: **(PLACE OF CRIMINAL LAW IN CRIMINAL SCIENCE)**

குற்றவியல் சட்டத்தின் நோக்கமானது, தனி நபர்களின் நடத்தையை ஒழுங்குபடுத்துவதன்மூலம் ஒழுங்கான சமூகத்தனை உருவாக்குவதேயாகும்.

சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்பின் அளவைப் பொறுத்து, வரையறுக்கப்பட்ட தண்டனைகளுக்கு குற்ற செயல் புரிந்த அந்த தனி நபர் உள்ளாக்கப்படுவார்.

மேலும், குற்றவியல் விஞ்ஞானத்தை வளர்ப்பதற்கான அடிப்படையாக குற்றவியல் சட்டம் விளங்குகிறது. குற்றவியல் விஞ்ஞானம் என்பது, சமூகத்தில் குற்றங்கள் நடைபெறுவதை குறைப்பது மற்றும் தடுக்கும் கல்வியாகும். மற்றும் குற்றவாளிகளை சீர்திருத்தவும் இது உதவும். குற்றவியல் விஞ்ஞானத்தின் வெளிப்பாடு தான் ஒரு நாட்டின் குற்றவியல் சட்டமாகும்.

குற்றவியல் சட்டம் குற்றங்களின் பல்வேறு வகைகளை விவரிக்கிறது. மற்றும் ஒவ்வொரு குற்றத்திற்கான தண்டனைகளையும் விவரிக்கிறது. ஆனால் குற்றவியல் விஞ்ஞானம் குற்றச்சட்டத்தை படித்தல், குற்றவாளிகளின் நடத்தை மற்றும் சமூகத்திலிருந்து குற்றங்களை ஒழிப்பதற்கான வழிமுறைகளையும் கற்க வைக்கிறது.

குற்றவியல் விஞ்ஞானம் தற்போது குற்றவியல் (criminology) என்று அழைக்கப்படுகிறது. இதில் குற்றவியல் சட்டம் ஒரு பகுதியாகும்.

இவ்வாறு குற்றவியல் விஞ்ஞானம் (குற்றவியல்) ஒரு மரம் என்றால், குற்றவியல் சட்டம் ஒரு கிளையாகும். இவைகள் ஒன்றுக்கொன்று துணையாக நிற்கின்றன.

## முந்தைய பல்கலைக்கழக வினாக்கள்

1. 'குற்றமனமின்றி குற்றசெயலில்லை' குற்றவியல் சட்டத்தில் இக்கோட்பாட்டினை விளக்குக.
2. 'குற்றமனமின்றி குற்றச்செயலில்லை'. இதனை ஆங்கிலம் மற்றும் இந்திய குற்றவியல் சட்டத்தில் செயல்படுத்துவது குறித்து விளக்குக.
3. 'குற்றச் செயலுக்கான' பல்வேறு காரணங்களை விளக்குக.
4. 'ஒரு குற்றம் ஏற்படுத்துவதற்கு செயலும் நோக்கமும் ஒன்றாக இருக்க வேண்டும்' – விமர்சனம் செய்க. இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் இதற்கான விதிவிலக்கு ஏதும் இருக்கிறதா?
5. சட்டமுறையான குற்றங்களில் குற்றமனக் கோட்பாட்டினை செயல்படுத்துவது குறித்து கலந்தாய்வு செய்க – தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளை பரிந்துரை செய்க.
6. குற்றம் என்பதற்கு பதவிளக்கம் தருக. குற்றத்திற்கும் ஒழுக்கத்திற்கும் உள்ள தொடர்பினை விளக்குக.
7. பகரப் பொறுப்பு என்பது குற்றவியல் சட்டத்தில் கிடையாது. இதனை விளக்குக.
8. சிறு குறிப்பு வரைக: அ) காரண காரியம் ஆ) குற்றவியல் விஞ்ஞானத்தில் குற்ற சட்டத்திற்கான இடம் இ) இயல்புத் தீங்குகள் மற்றும் விலக்குத் தீங்குகள்.

ஐ ஐ ஐ



# 1—அ. சாத்திய குற்றத்தரப்பினர்கள்
## (POSSIBLE PARTIES TO CRIME)

(சிறு குறிப்பு)

### அ. முன்னுரை: (INTRODUCTION)

ஆங்கில சட்டத்தின்படி குற்றத்தரப்பினர்கள் முதற்படி பிரதான குற்றவாளி மற்றும் இரண்டாம் படி பிரதான குற்றவாளி என்றும், மற்றும் குற்றத்திற்கு முன் துணையர் மற்றும் பின் துணையர் என்றும் வகைப்படுத்தப்படுகிறது.

ஒரு குற்றம் எப்பொழுதும் ஒரு நபரால் மட்டும் செய்யப்படுவதில்லை. அது பல நபர்களால் செய்யப்படலாம். அவ்வாறு குற்றத்தில் பங்கேற்றவர்கள் அனைவரும் குற்றத்தரப்பினர்கள் என்று கூறப்படுவார்கள்.

### ஆ. குற்றத்தரப்பினர்கள்: (PARTIES TO CRIME)

ஒரு குற்றத்திற்கு பின்வரும் நான்கு சாத்தியமான தரப்பினர்கள் உண்டு.

1. முதற்படி பிரதான குற்றவாளி
2. இரண்டாம்படி பிரதான குற்றவாளி
3. குற்றத்திற்கு முன் துணையர்
4. குற்றத்திற்குப் பின் துணையர்

**1. முதற்படி பிரதான குற்றவாளி: ( Principle in the I degree)**

குற்றத்தை உண்மையில் செய்யும் / செய்த அல்லது செய்வதில் பங்கேற்ற நபர் முதற்படி பிரதான குற்றவாளி என்று அழைக்கப்படுகிறார். அவர்தான் உண்மையான குற்றவாளி. குற்றவியல் சட்டப்படி குறிப்பிடப்பட்டுள்ள தண்டனை அவருக்கு வழங்கப்படுகிறது.